# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1846/8 - 2014 ජනවාරි මස 20 වැනි සඳුදා - 2014.01.20

*1846/8 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### மதுவரிக் கட்டளைச் சட்டம்

*மதுவரி அறிவித்தல் இல. 962*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 32 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இதனகத்துக் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையிலுள்ளதும் மேற்குறித்துரைக்கப்பட்ட பிரிவின் கீழ் ஆக்கப்படுவதுமான விதிகள், 2014, சனவரி 21 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் என இவ்வறிவித்தல் மூலம் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*2010, பெப்புருவரி 12 ஆந் திகதிய 1640/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 912 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2013, திசெம்பர் 20.*

### *அட்டவணை*

*விதிகள்*

*1. மதுவரி கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 22 ஆம் பிரிவின் கீழ் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்பட்டதும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான அத்தகைய விகிதங்களில் தீர்வையொன்று, உரிமம் பெற்றவரினால் தயாரிக்கப்பட்ட பியர், சாராயம் அல்லது ஸ்பிரிட்டு ஒவ்வொரு லீற்றர் தொடர்பிலும், அத்தகைய உரிமம் பெற்றவரினால் குறித்த மாதமொன்றின் முதல் 15 ஆம் நாள் உற்பத்தி தொடர்பில் குறித்த மாதத்தின் இறுதி நாளன்று அல்லது அதற்கு முன்னரும், மாதமொன்றின் 15 ஆம் நாளுக்கு பிந்திய உற்பத்தி தொடர்பில் அதனை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னரும் செலுத்தப்படுதல் வேண்டும்;*

*2. குறித்த திகதியில் தீர்வையினைச் செலுத்துவதற்குத் தவறும் உரிமம்பெற்ற ஒருவர் மாதமொன்றுக்கு மூன்று வீதம் என்ற விகித தீர்வைக்கு மேலதிகமாக மேலதிகக் கட்டணமொன்றினைச் செலுத்துவதற்கு கடப்பாடுடையவராக இருப்பார்;*

*3. மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனை (2) இல் குறிப்பீடு செய்யப்பட்டவாறு உரிமம்பெற்ற ஒருவர் தீர்வையினைச் செலுத்துவதற்கு வழங்கப்பட்டுள்ள சலுகையானது உரிமம் பெற்றவர் தீர்வையினைச் செலுத்த வேண்டிய இறுதித் திகதியிலிருந்து ஆகக்கூடிய ஆறுமாதமாக வரையறுக்கப்படுதல் வேண்டும்.*

*02-115*




*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*